சுவாமி விபுலாநந்தரின் ஒப்பியல் நோக்கு

The Comparative Approach of Swami Vipulananda

Mr.P.Suman[1]

sumanp@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழாராய்ச்சியின் வளர்ச்சியில் விபுலாநந்தரது பங்களிப்பும் அளப்பரியது. அவர் முத்தமிழையும் இணைத்துத் தமிழாய்வுகளை முன்னெடுத்தார். அவரது ஆய்வுகள் நூல்களாகவும் கட்டுரையாக்கங்களாகவும் வெளிவந்தன. பல்வேறு நிகழ்வுகளில் ஆற்றிய பேருரைகளும் தாம் ஆசிரியராகவிருந்த இதழ்களில் எழுதிய குறிப்புகளும் அவற்றோடு இணைத்து நோக்கத்தக்கன. அவற்றிற் பல> ஒப்பியல் கண்ணோட்டத்தில் அணுகப்பட்டுள்ளன. இந்நிலையில்> அவரது கட்டுரையாக்கங்களை அடிப்படையாகக் கொண்டு விபுலாநந்தரிடம் குடிகொண்டிருந்த ஒப்பியல் சிந்தனையோட்டங்களை இக்கட்டுரை ஆய்ந்து வெளிப்படுத்துகிறது. அத்தகைய ஆய்வானது விபரண> பகுப்பாய்வு> ஒப்பியல் அணுகுமுறைகளைக் கைக்கொள்கிறது. இவ்வாய்வின் வாயிலாக ஒப்பியலாய்வு வளர்ச்சியில் விபுலாந்தரின் பங்களிப்பு வெளிச்சம்போட்டுக் காட்டப்படுகிறது. தமிழில் ஒப்பியலாய்வின் வளர்ச்சி பற்றிச் சிந்திப்போர் விபுலாந்தரைத் தவிர்க்கவியலாது என்பதை இந்த ஆய்வு நிறுவுகிறது. இலங்கையில் ஒப்பியல் ஆய்வு கோட்பாட்டு அடிப்படையில் கைலாசபதியால் முழுவீச்சோடு முன்னெடுக்கப்பட்டதென்பதே தமிழ் ஆய்வுலகம் அறிந்த செய்தி. அண்மைக் கால ஆய்வுகள் சில> கைலாசபதிக்கு முன்னர் தனிநாயக அடிகள் ஒப்பியல் சிந்தனைகளை வெளிப்படுத்தியிருந்தமையை விரிவான சான்றுகளுடன் முன்னிறுத்துகின்றன. இந்நிலையில்> அவருக்கும் முன்னர் விபுலாநந்தரிடம் இச்சிந்தனை வலுவாக வேரூன்றி இருந்தவாற்றைப் பல்வேறு சான்றுகளை முன்னிறுத்தி இவ்வாய்வு நிறுவுகிறது.

திறவுச் சொற்கள் : ஒப்பியலாய்வு> முத்தமிழ்> செந்தமிழ்> கொடுந்தமிழ்

Abstract

The contribution of Swami Vipulananda to the development of Tamil research in the twentieth century is also noteworthy. He advanced Tamil studies by integrating *Muththamil*. His research appeared in the form of books as well as essays. The keynote speeches he delivered at various events and the notes he wrote in the journals where he served as editor are also to be considered alongside these works. Many of them were approached from a comparative perspective. In this context, the present article examines and brings to light the streams of comparative thought that were deeply rooted in Vipulananda, based primarily on his essays. This study adopts descriptive, analytical, and comparative methodologies. Through this research, Vipulananda's contribution to the growth of comparative studies is clearly highlighted. The study

[1] *Lecturer, Department of Tamil studies, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.*

establishes that anyone reflecting on the development of comparative research in Tamil cannot overlook Vipulananda. It is well known in Tamil scholarly circles that in Sri Lanka, comparative studies were systematically advanced on a theoretical basis by Kailasapathy. Some recent studies, with extensive evidence, argue that prior to Kailasapathy, Thaninayagam Adigal had articulated comparative ideas. In this context, the present study demonstrates, with various evidences, that even before him, such comparative thinking had been firmly rooted in Vipulananda.

Keywords: *Comparative Studies, Muthtamil, Sentamil, Koduntamil*

அறிமுகம்

முத்தமிழும் துறைபோக விளங்கிய தமிழறிஞர்களில் சுவாமி விபுலாநந்தரும் ஒருவர். அவரது தமிழ்ப்பணிகள் பன்முகப்பட்டு விளங்கினும்> அவற்றுள் உயர்ந்தோங்கி நிற்பது அவரது ஆய்வுப்பணியே. இசைத்தமிழ்> நாடகத் தமிழ்> இயற்றமிழ் என முத்தமிழையும் ஒருசேர தமது ஆய்வுப் பொருளாக்கியவர்> விபுலாநந்தர். அவரது ஆய்வறிவுத் திறனின் உச்ச வெளிப்படாக அமைவது யாழ்நூல். இவ்வாராய்ச்சிக்கு அப்பால்> பல்வேறு சஞ்சிகைகளுக்கு எழுதிய கட்டுரைகள்> பேருரைகள் வாயிலாகவும் தமது ஆய்வுச்சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளார். அத்தகைய ஆய்வுகளில் இழையோடிக் காணப்படும் ஒப்பியல் சிந்தனையை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்காகும்.

விபுலாநந்தரது ஒப்பியல் சிந்தனைகளை (யாழ்நூலாராய்ச்சி தவிர்த்து) உலக நாகரிகங்களுக்கும் தமிழர் நாகரிகத்துக்கும் இடையிலான தொடர்பு> மேலைத்தேய விஞ்ஞான மரபும் தமிழின் அறிவியல் மரபும்> செந்தமிழ் - கொடுந்தமிழ்> இலக்கிய மரபு ஆகியன குறித்து அவர் வெளிப்படுத்திய கருத்தோட்டங்கள் வாயிலாக அடையாளங்காண முடிகிறது. அவ்வகையில்> மேற்றிசைச் செல்வம்> விஞ்ஞானதீபம்> உலக புராணம்> திருக்குறள் முதலதிகாரமும் திருச்சிவபுரத்துத் திருப்பதிகமும்> சோழ மண்டலத் தமிழும் ஈழ மண்டலத் தமிழும் ஆகிய கட்டுரைகள் கவனிப்புக்குரியனவாகின்றன.

ஆய்வுப் பிரச்சினை

ஒப்பியலாய்வு வளர்ச்சியில் முத்தமிழ் ஆய்வுகளை முன்னெடுத்த விபுலாநந்தரின் பங்களிப்பு யாதென்பதே இவ்வாய்வின் பிரச்சினையாக அமைகின்றது.

ஆய்வின் நோக்கம்

விபுலாநந்தர் ஒப்பியலாய்வுச் சிந்தனைகளை வெளிப்படுத்திய ஆக்கங்களை அடையாளப்படுத்தல்> ஒப்பியலாய்வுகளை வெளிப்படுத்திய விடயப்பரப்புகளை இனங்காட்டல்> அவரது ஒப்பியல் கண்ணோட்டத்தை விமர்சன ரீதியாக அணுகுதல்> விபுலாநந்தர் ஒப்பியல் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட விடயப்பரப்புகள் பின்வந்த ஆளுமைகளால் விரிவான ஒப்பியலாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டமையை எடுத்து விளக்குதல்

என்பனவற்றின் வாயிலாக ஒப்பியலாய்வு வளர்ச்சியில் விபுலாநந்தர் முக்கிய ஆளுமையாக விளங்குமாற்றினை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

முன்னைய ஆய்வுகளின் மீளாய்வும் ஆய்வு இடைவெளியும்

தமிழாராய்ச்சியின் வளர்ச்சியில் விபுலாநந்தரின் பங்களிப்பினை இனங்காட்டும் வகையில் பல்வேறு தளங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் அவரது ஆய்வுகளில் வெளிப்படும் ஒப்பியல் சிந்தனைகளை இனங்காட்டும் நோக்கில் வெளிவந்த ஆய்வுகள் மிகக் குறைவே. க.கைலாசபதியின் "முத்தமிழ் முனிவரின் ஒப்பியல் நோக்கு" எனும் கட்டுரை மாத்திரமே விபுலாநந்தரது ஒப்பியல் சிந்தனைகளை எடுத்துவிளக்குவதை நோக்காகக் கொண்டெழுந்த தனியான ஆக்கமாகும். அச்சிறுகட்டுரை பிரதான இரு விடயங்களை முன்னிறுத்திச் செல்கிறது. ஒன்று> விபுலாநந்தர் ஒப்பியலாய்வுகளை நிகழ்த்துவதற்குப் பக்கபலமாய் அமைந்தது அவரது பன்மொழி அறிவு என்பது. இரண்டு> அவரது ஒப்பியலாய்வுகள் வெளிப்பட்டு நிற்கும் ஆக்கங்களை அடையாளப்படுத்துவது. விபுலாநந்தரிடத்தில் ஒப்பியலாய்வுச் சிந்தனை வெளிப்பட்டு நின்றவாற்றை முதன்முதலில் எடுத்துரைத்த கட்டுரையும் இதுவே.

அ.சண்முகதாஸ்> "சுவாமி விபுலாநந்தரின் ஆய்வுத் திறனும் நவீன நோக்கும்" என்ற கட்டுரையில் விபுலாநந்தரது ஒப்பியலாய்வுகள் குறித்தும் கருத்துரைத்துள்ளார். குறிப்பாக> விபுலாநந்தரது ஒப்பியலாய்வுச் சிந்தனைகள் வெளிப்பட்ட விடயப்பரப்புகள் குறித்து அடையாளப்படுத்தியுள்ளார். இவ்விரு கட்டுரையாக்கங்கள் தவிர்த்து விபுலாநந்தரது தமிழாய்வுகள் குறித்து வெளிவந்த ஆக்கங்கள் மேலெழுந்தவாரியாகவே விபுலாநந்தரது ஒப்பியல் ஆய்வுகள் குறித்து அடையாளப்படுத்துகின்றன. அவ்வகையில்> சி.மௌனகுரு> வி.சிவசாமி> இ.பாலசுந்தரம்> பழனி அரங்கசாமி ஆகியோரது கட்டுரைகள் நோக்கத்தக்கன.

சி.மௌனகுருவின் "விபுலாநந்த அடிகளாரின் சமூக> கலை> இலக்கிய நோக்கு" என்னும் நூல் விபுலாநந்தரது ஆய்வுச் சிந்தனையையும் வெளிப்படுத்தி நிற்கிறது. சில இடங்களில் விபுலாநந்தரிடம் குடிகொண்டிருந்த ஒப்பியல் கண்ணோட்டத்தையும் அடையாளப்படுத்திச் செல்கிறது. பழனி அரங்கசாமியின் 'மதங்க சூளாமணி – ஒரு திறனாய்வு" என்னும் கட்டுரை சேக்ஸ்பியருடைய நாடகங்களை தமிழ்> வடமொழி நாடக இலக்கண நூல்களுடனும் ஒப்பிட்டு நோக்கிய விபுலாநந்தரது திறனை எடுத்துவிளக்குகிறது. வி.சிவசாமியின் "விபுலாநந்த அடிகளும் தமிழர் வரலாறும்" என்னும் கட்டுரை தமிழர் நாகரிகத்தோடு சுமேரிய நாகரிகத்தை ஒப்பிட்டு நோக்கியமை குறித்தும் அடையாளப்படுத்துகிறது. இ. பாலசுந்தரத்தின் "விபுலாநந்த அடிகளாரின் ஆய்வுப் புலங்கள்" என்னும் கட்டுரை> விபுலாநந்தரது ஆய்வுப் புலங்களில் ஒன்றாக ஒப்பியல் இலக்கியம் விளங்கியவாற்றையும் அடையாளப்படுத்திச் செல்கிறது. முன்னர் சுட்டிய இரு கட்டுரைகளும் வெளிப்படுத்திய விடயங்களை அடியொற்றிய விவாதங்களே இக்கட்டுரைகளிலும் உள்ளன. புதிய கருத்துக்களையோ சான்றுகளையோ ஆழமான நோக்கையோ அவை முன்னிறுத்தவில்லை. இந்நிலையில்> பல்வேறு சான்றுகளையும்

முன்னிறுத்தி விபுலாநந்தரது ஒப்பியலாய்வுச் சிந்தனைகளை ஆழ ஆய்ந்து வெளிப்படுத்த இக்கட்டுரை முனைகிறது.

ஆய்வு முறையியல்

விபுலாந்தரது ஆக்கங்களில் வெளிப்பட்டு நிற்கும் ஒப்பியலாய்வுச் சிந்தனைகளை எடுத்துரைப்பதற்கு விபரண ஆய்வு முறை> பகுப்பாய்வு முறை என்பன கைக்கொள்ளப்பட்டுள்ளன. அவரது ஆக்கங்கள் வெளிவந்த பின்புலத்தை ஆராயவும் பின்வந்த ஆளுமைகள் விபுலாநந்தர் ஒப்பியலாய்வுகளை மேற்கொண்ட விடயப்பரப்புகளில் ஆழ்ந்த ஆய்வுகளை மேற்கொண்டவாற்றை எடுத்துரைக்கவும் வரலாற்று அணுகுமுறை கைக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வின் முடிவுகளும் கலந்துரையாடலும்

உலக நாகரிகங்கள் - தமிழர் நாகரிகம்

ஒப்பியல் நோக்கில் எழுதப்பட்ட – மிகுந்த கவனிப்புக்குரிய - கட்டுரையாக 'மேற்றிசைச் செல்வம்| விளங்குகிறது. இவ்வாக்கத்தைக் கட்டுரையாக்கமாக அன்றி> பன்னிரண்டு அதிகாரங்கள் கொண்ட நூலாக எழுதவே திட்டமிட்டிருந்தார். அந்நூலாக்கத்தில் உள்ளடங்கவிருந்த விடயங்களை முன்னுரையாக அமையும் முதலாம் அதிகாரத்தில் எடுத்துரைக்கிறார். "செந்தமிழ்த் தாய்க்கு இயன்ற தொண்டு செய்ய வேண்டுமென்று எண்ணி> மேற்றிசைச் செல்வம் (The Wealth of the West) என்னும் இந்நூலையும் விஞ்ஞானதீபம் (The Light of Science) எனப் பின்னுமொரு நூலையும் எழுத ஆரம்பித்தேம். இவையிரண்டும் சுருக்க நூலாகப் பலவாய பொருட்டுறைகளைத் தம்முள் அடக்கியவாக இருத்தல் வேண்டுமென்பது எமது எண்ணம். அதிகார வகையைக் கூற இவ்வுண்மை புலப்படும். இம்முன்னுரை முடிந்ததும் இரண்டாம் அதிகாரமாக மேனாட்டு நாகரிக வரலாற்றைக் கூறத்தொடங்கி> சுமேரிய> அக்கேடிய> ஆசுரேய> பாபிலோனிய> எகிப்திய நாகரிக நிலைமையையும் மூன்றாம் அதிகாரத்திலே இப்பொருள்களையே தொடர்ந்து கிரேக்க> ரோமானிய நாகரிகம் வளர்ந்து பரந்து மேற்றிசைக்குச் சென்ற வரலாற்றினையும்..." (இரகுபரன்> க. > (ப.ஆ.)> 2020: 87) என நீண்டு செல்லும் அவ்விவரணத்தின் அடிப்படையில் நூலின் பொருண்மையானது முன்னுரை> சுமேரிய அக்கேடிய> ஆசுரேய> பாபிலோனிய> எகிப்திய நாகரிகம்> கிரேக்க> ரோமானிய நாகரிகம்> மத்திய காலச் சரித்திரம்> மேனாட்டார் பிற தேசங்களைக் கைப்பற்றியவாறு> மேனாட்டு அரசியல் முறை> மேனாட்டுக் கல்விக்கழகங்கள்> விஞ்ஞான நூற்பெருக்கம்> மகாயுத்தமும் அதனால் நேர்ந்த மாறுதல்களும்> அமெரிக்கரது முன்னேற்றம்> வேதாந்த ஞானம் மேனாட்டிற் பரவுதல்> ஆசியாக் கண்டந் துயிலொழிந்தெழுதல் என அமைகிறது.

விபுலாநந்தரின் எண்ணம் நிறைவேறாது போனமை தமிழ்கூறும் நல்லுலகுக்கு ஏற்பட்ட இழப்பேயாயினும்> அவரால் எழுதப்பட்ட இரு அதிகாரங்களும் தமிழ்த்தாய்க்குப் அணிகலன் சேர்ப்பனவாய் அமைந்த கருத்துக்கோவைகளாக விளங்குகின்றன என்பதிற் கருத்து

வேறுபாடில்லை. அக்கட்டுரையில் சுமேரிய நாகரிகம்> எகிப்திய நாகரிகம்> எபிரேய நாகரிகம்> யவனபுர நாகரிகம் என்பன தமிழ்மொழி> தமிழர் நாகரிகத்தோடு கொண்டுள்ள தொடர்பை மேலைநாட்டு அறிஞர்களது ஆய்வுமுடிபுகளைத் துணைக்கொண்டும் தமது ஒப்பீடுகளை முன்வைத்தும் மிக விரிவாக எடுத்துரைக்கிறார்.

சுமேரிய நாகரிகம்

"உலகத்தில் முதன்முதற் கட்டிடங்களையும் பட்டணங்களையும் உண்டாக்கியவர்கள் சுமேரியரென்னுஞ் சாதியர். இவர்கள் யூத வகுப்பு ஆரியவகுப்பைச் சேர்ந்தவர்களல்லர். எங்கிருந்து வந்தார்களோ தெரியவில்லை. இவர்களுடைய பாஷை பலுக்கிஸ்தானத்தின் சில பாகங்களிலும் காக்கேசிய மலைநாட்டிலும் உள்ள பாஷைகளையும் ஸ்பானியாவில் ஒரு பாகத்திற் பேசப்படுகிற பாஸ்க் என்னும் பாஷையையும் ஒத்திருக்கிறது. இப்பாஷைகள் எல்லாம் திராவிட மொழிகளோடு நெருங்கிய சம்பந்தம் உடையன. சுமேரியர் கோபுரத்தோடுகூடிய கோயில்களைக் கட்டினார்கள். நிப்பூர் என்னும் இடத்திலே தமது பிரதான தெய்வமாகிய 'எல் - லில்| என்னுஞ் சூரியதேவனுக்கு ஒரு கோயிலைக் கட்டியிருந்தார்கள்" (இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020: 92) எனச் சுமேரிய நாகரிகத்துக்கும் தமிழ்நாட்டுப் பூர்வ நாகரிகத்துக்கும் இடையேயான ஒற்றுமையைத் திராவிட மொழியியல் கண்ணோட்டத்தில் ஸர்.எச்.எச் ஜான்ஸ்டன்> எச்.ஜி. உவெல்ஸ் ஆகிய மேலை நாட்டறிஞர்கள் முன்வைத்த ஆய்வு முடிவுகளை மேற்கோள் காட்டி முன்னெடுத்துச் செல்கிறார்.

மேற்படி கட்டுரையில் முன்வைத்த கருத்தாக்கங்களுக்கு அப்பால் 'உலக புராணம்| என்ற கட்டுரையின் முற்பகுதியிலும் சுமேரிய நாகரிகத்துக்கும் தமிழர் நாகரிகத்துக்கும் இடையேயான ஒற்றுமை குறித்த விரிவான ஆய்வை நிகழ்த்துகிறார். அவ்வாய்வில் 'தமிழர் வழிவந்தவர்களே சுமேரியர்| என்ற கருத்தை விரித்துரைக்கிறார். எச்.ஆர்.ஹால் (H.R.Hall)> றகொசின் (Ragozin) முதலான அறிஞர்களது கருத்துக்களின் துணைகொண்டு சுமேரியருக்கும் தமிழருக்குமான உறவை ஒப்பிட்டு ஆராய்கிறார். "பழைய சுமேரியர் திராவிட குலத்தாரென்று சுமேரிய உருவங்களைக் கூர்ந்து நோக்குவாருக்கு இனிது புலப்படும். திராவிட மொழிகளை இக்காலத்திலும் வழங்கும் தென்னிந்தியனின் உருவத் தோற்றமே பழைய சுமேரியனின் உருவத் தோற்றம். பழைய சுமேரியர் இந்தியாவிலிருந்து கரைவழியாகவும் பாரசீகக் கடல்வழியாகவும் சுமேரு நாட்டிற் குடியேறினார்களென்று எண்ண இடமுண்டு. இவர்கள் குடியேறிய புதுநாட்டிற்குக் கொண்டு வந்த நாகரிகம் சிந்துநதிக்கரையிலே வளர்ச்சி யெய்திருக்கலாம். சித்திரங்களை எழுத்தாக வழங்கிய முறையினின்று செப்பமெய்திய இவர்களது எழுத்துமுறை பின்னாளிலே பாபிலோனியத்திலே சதுரமுனை யெழுத்தாணிகளாலே பசுமண் வட்டிகைகளிலே எழுதப்பட்டு (Coneiform என்னும்) ஆப்பு வடிவ எழுத்துக்களாக உருத்திரிந்தது" (இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020: 888) என்ற எச்.ஆர்.ஹாலின் கருத்திலிருந்து அவ்வாராய்ச்சியினை விரித்துச் செல்கிறார்.

சுமேரியருக்கும் திராவிடருக்குமான தொடர்பை முதன்முதலில் தமிழிலே முன்வைத்த அறிஞர் விபுலாநந்தரே. விபுலாநந்தரின் மேற்படி முன்வைப்பு> விபுலாநந்தர் பணியாற்றிய

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பயின்று> பின்நாளில் பேராசிரியராக விளங்கிய ஆ.சதாசிவம் அத்துறைசார் ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்கான தூண்டுகோலை வழங்கியிருக்கலாம். மொழியியலைத் தமது விருப்புக்குரிய ஆய்வுத்துறையாகக் கொண்டிருந்த சதாசிவம் அவர்கள்> சுமேரிய மொழியாய்வுகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். சுமேரிய மொழி தொடர்பான ஆராய்ச்சி அவரது வாழ்வியல் ஆய்வுப் பணியாக அமைந்தது எனக் கூறுமளவுக்கு 23 ஆண்டுகள் அப்பணியில் ஈடுபட்டிருந்தார். மொசப்பட்டேமியா> பபிலோன்> அல்ஜீரியா> ஈராக் என்று பல்வேறு பெயர்களை வெவ்வேறு காலங்களிலே தாங்கும் நாடு சுமேரிய மொழி வழங்கிய நாடாக ஒரு காலத்தில் விளங்கியது. அச்சுமேரிய மொழி ஆதித்தமிழ் அல்லது திராவிடம் என்று நிரூபித்து> தமிழர்களின் தொல்பண்பாட்டு வரலாற்றுச் சிறப்பை உலகம் அறியச் செய்ய வேண்டுமென்பதே பேராசிரியரின் அவாவாக இருந்தது. தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி எனும் ஆய்வு நூலின் முகவுரைக் குறிப்பில் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பது இக்கருத்துக்குத் தக்க சான்றாகும் :

> சுமர்மொழியின் இலக்கண அமைப்பு> சொல் வடிவங்கள் என்பன தமிழில் உள்ளனவற்றைப் பெரிதும் ஒத்திருக்கின்றமையின் சுமர்மொழி பண்டைத்தமிழிலிருந்து கிளைத்த ஒரு மொழியென்றும் அதில் காணப்படும் பழைய சொல் வடிவங்கள் அழிந்து போன பழந்தமிழ்ச் சொற்களைப் பெரிதும் ஒத்திருக்கக் கூடும் என்றும் இரு கோட்பாடுகளை இந்நூலில் நிலைநாட்டியுள்ளேன். ஒரு மொழியின் மூலச் சொற்களை இன்னொரு மொழியின் அழிந்துபோன மூலச் சொற்களின் தரவுகளைக் கொண்டு ஆய்வு செய்யும் முறை ஒரு புதிய அணுகுமுறையாகும். சுமர்மொழி பண்டைய சொற்களைக் கல்லேடுகளிற் பொறித்துவிட்டு வழக்கிழந்த மொழியாகிவிட்டது. தமிழ்மொழியோ இன்றைய சொற்களின் பண்டைய மூல வடிவங்களைக் கால வெள்ளத்தில் இழந்துவிட்டது. எனவே> இன மொழிகளுள் ஒன்று ஏற்படுத்தியுள்ள வெற்றிடம் மற்றைய மொழிச் சொற்களால் நிரப்பப்பட்டுள்ளது (சதாசிவம்> ஆ> 2006).

சுமேரிய – தமிழ் மொழி குறித்த அவரது நோக்குநிலையின் Sumerian: A Dravidian Language (1965)> Proto Sumero Dravidian (2017)> தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி ஆகிய ஆராய்ச்சி நூல்களாகும். மேலைநாட்டு அறிஞர்களால் தொடங்கப்பட்ட சுமேரியர் - சுமேரிய மொழி குறித்த ஆய்வுப் புலம்> விபுலாநந்தரால் தமிழபிமானிகளிடத்தில் எடுத்துச்செல்லப்பட்டு> சதாசிவத்தின் ஆய்வுகள் மூலமாக முற்றுப்பெற்றது. அந்தவகையில்> திராவிட நாகரிகத்தின் பழம் பெரும் கூறொன்றை மீட்டெடுப்பதற்கான சிந்தனையோட்டங்களைத் தமது ஒப்பியல் ஆய்வுகள் வழியாக விபுலாநந்தர் வெளிப்படுத்தியிருந்தார் எனலாம்.

யவனபுர நாகரிகம்

சுமேரிய நாகரிகத்துக்கும் தமிழர் நாகரிகத்திற்கும் இடையேயான தொடர்பை ஆராய்ந்தது போல> யவன நாகரிகத்துக்கும் தமிழர் நாகரிகத்துக்கும் இடையேயான தொடர்பை தெய்வ வழிபாடுகள்> தமிழ் நெடுங்கணக்கு> இலக்கிய மரபு> தமிழ் நாடக மரபு முதலானவற்றுடன் ஒப்புநோக்கி ஆராய்கிறார். யவன ரிறாஜடி நாடக மரபுக்கும் தமிழரின் தொல்கூத்துமரபுக்கும் இடையேயான தொடர்பினை ஆராயுமவர்> “காடுகெழு செல்விக்குப் பரவுக்கடன் கொடுக்குங்கால் அவளது நிலைமையைச் சிறப்புறக் கூறி வழுத்திநின்றாடும் கொற்றவை நிலையாகிய பொதுவியற்கூத்தும் வெறியாட்டயர்ந்த வெங்களத்து மறியறுத்துக் குருதிப்பலி செலுத்தி வேலனை வழுத்திநின்றாடும் காந்தள் ஆகிய பொதுவியற் கூத்தும் ஒருபுடை யொப்பெனற்குரிய பொதுவியற் கூத்தே பண்டை யவனபுரத்தில் ரிறாஜடி (Tragedy) என்னும் பெயரால் வழங்கப்பட்டது. ரிறாஜடி என்னும் சொல்லுக்குப் பொருள் “ஆட்டுமறிக்கவிதை“ யென்பது. உண்டாட்டுத் தெய்வமாகிய தயனிச (Dionysus)னுக்கு வேனில்விழாக் கொண்டாடுங் காலத்து> ஒரு ஆட்டுக்கடாவைப் பலிசெலுத்தி அத்தெய்வத்தினது மெய்க்கீர்த்தியையும் அவனைப் பரவும் வீரரது புகழையுங் கூறுவதே ரிறாஜெடிக்கு உரிய பொருளாயிருந்தது" (இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020: 117) என்று குறிப்பிடுகிறார். அவ்வாறே> யவனத்தில் வழங்கும் கமிடி வகை நாடகங்கள் தமிழின் குறத்திப்பாட்டு> உழத்திப்பாட்டு என்பனவற்றுடன் ஒத்திருப்பதாகவும் காண்கிறார். “நகைச்சுவையும் உவகைச்சுவையும் நிறைந்த நாடகங்கள் ‘கமிடி| (Comedy) எனப்படுவன. இச்சொல்லுக்குப் பொருள் ‘சிறுகுடிப்பாட்டு|> ‘பண்ணைப்பாட்டு| என்று கொள்ளலாகும். நமது தமிழ்மொழியிலுள்ள குறத்திப்பாட்டு> உழத்திப்பாட்டு என்னும் இவை யவனபுரத்தாரது பண்ணைப்பாட்டு இலக்கணங்களைப் பெரிதும் பெற்றன" (இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020: 118) என்பது அவரது நோக்கு.

யவனபுரத்துத் தெய்வங்களில் யுறானஸ் (Uranus)> ஜூப்பிற்றர் (Jupiter) ஆகிய தெய்வங்களின் பெயர்கள் இந்திய மரபிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டவை என்கிறார். யவனபுரத்தில் வழிபடப்படும் அத்தெய்வங்களின் பெயர்களையும் இந்திய மரபில் வழங்கும் தெய்வங்கள் பெயர்களையும் ஒப்பிட்டாராய்ந்து மேற்படி முடிவுக்கு வருகிறார். இவ்விடயம் தொடர்பில் விபுலாநந்தரின் பின்வரும் வியாக்கியானப் பகுதி கவனத்திற்குரியது:

> ஜூப்பிற்றர் என்னும் மொழி த்யாஉஸ் பித்ரு (Dyaus) என்னும் வடசொல்லினது சிதைவாகும். இத்தெய்வத்தை த்யாஉஸ் என்னும் மொழியினது சிதைவாகிய சேயுஸ் (Zeus) என்னும் பெயரினாலும் வழங்குவதுண்டு. த்யாஉஸ் என்னும் வடமொழி பிரகாரம் என்னும் பொருளினையுடையது. இப்பெயர் கடவுட் பெயராக இருக்கு வேதத்திலும் வழங்கப்படுகிறது. யூறனஸ் என்பது உராணஸ் என்பதன் சிதைவு. உகர வகர ஒற்றுமைபற்றி இச்சொல் வடமொழியில் வருண என்று வழங்கும். ரிக்ஸம்ஹிதையில் வருணன் என்னும் மொழி வானமண்டிலத்துத் தலைவனாகிய தேவதேவனைக் குறிப்பது. பின்னாட்களில் இம்மொழி கடற்றெய்வத்தின் பெயரைக் குறிப்பதாயிற்று. பூர்வ யவனர் தமது

> முன்னோராகிய ஆரிய மக்களிடத்திலிருந்து பிரிந்துபோய காலத்து இந்த இரண்டு தெய்வப்பெயரையும் அறிந்திருந்ததார்களென்பது ஆராய்ச்சியாளர் துணிபு (இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020: 123>124).

இந்திய தொல்குடிகளில் இருந்து பிரிந்துசென்ற மக்கட் கூட்டமே யவன நாகரிகம்> சுமேரிய நாகரிகம் முதலானவற்றைத் தோற்றுவித்தோர் என்ற கொள்கையையுடையவராக விபுலாநந்தர் விளங்கினாரென்பதற்கு அவரது எழுத்துக்கள் சான்றுகளாகின்றன. மேற்காட்டிய எடுத்துக்காட்டிலும் மேற்படி சிந்தனை தொனிப்பதை அவதானிக்கலாம்.

யவன (கிரேக்க) மொழியின் நெடுங்கணக்கும் தமிழ்மொழியின் நெடுங்கணக்கும் வரிவடிவில் பெரும்பாலும் ஒத்துள்ள தன்மையைத் தர்க்கரீதியில் விரிவாக ஆராய்கிறார். அத்தகைய ஆய்வின் முடிவில் "இவ்விரு மொழியின் வரிவடிவங்கள் ஒன்றினின் றொன்றெழுந்தனவாவோ> அன்றேல் இவற்றின் வேறாகிய மற்றொரு மொழியின் வரிவடிவத்தினின்று எழுந்தனவோ என்பதை மேலாராய்வோம்" என்று ஆய்வு நேர்மையோடு கருத்துரைப்பதும் நோக்கற்பாலது. இவ்விரு மொழிகளின் ஒப்புமையை அவர் எடுத்துரைக்கும் பாங்கிற்குக் கீழ்வரும் பகுதி எடுத்துக்காட்டாக வழங்கப்படுகிறது:

> யவனபுர மொழியின் நெடுங்கணக்கு இருபத்துநான்கு எழுத்துக்களைக் கொண்டது. உயிரெழுத்து ஏழு. மெய்யெழுத்துப் பதினேழு. மெய்யெழுத்துப் பதினேழனுள் தமிழ்மொழிக்கும் யவனபுர மொழிக்கும் ஒலியுருவத்தாற் பொதுவெழுத்தாவன ப>க>த>ல>ம>ந>ர>ச என்னும் எட்டுமாம். இருமொழிக்கும் பொதுவாகிய இவ்வெட்டு மெய்களும் ஒத்த வரிவடிவினவாக விருக்கின்றன. உயிரெழுத்துக்களுள் ஏகார ஓகாரங்கள் வேறுபட்ட வடிவின. யவனமொழி இகர உகரங்கள் பழந்தமிழ் யகர வகர ஒலியுருவை முறையே இகர உகரங்களாற் குறியீடு செய்வாராதலினால் இவையும் ஒப்புமையுடையனவாம். யவனமொழியில் ஆகார ஈகார ஊகார ஒலிவடிவங்கள் அவற்றோடு இனச்சார்புடைய குற்றெழுத்துக்களால் குறியீடு செய்யப்படுவன... அங்ஙனமாதலின் யவனபுர நெடுங்கணக்குத் தமிழ் நெடுங்கணக்கோடு பூரண ஒற்றுமையுடையதென்பது நிறுவப்படுகின்றது (இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020: 112).

யவன மொழி> தமிழ் மொழி> கிரேக்க மொழி> எகிப்திய மொழி முதலான மொழிகளின் வரிவடிவங்கள் குறித்து ஒப்பியல் ரீதியில் கருத்துரைக்கும் விபுலாநந்தர்> இறுதியில்> "இந்தியாவி லிக்காலத்தில் வழங்குகின்ற அக்ஷரமுறைக ளனைத்தும் அராபிய முதலிய செமித்திய மொழி யக்ஷரங்களும் யவனபுர ரோமபுர அக்ஷரங்களும் இவற்றின் வழித்தோன்றி இந்நாளில் மேற்றிசையில் வழங்குகின்ற ஆங்கிலேய முதலிய அக்ஷரங்களும் ஆகிய அனைத்தும் பினீசிய அக்ஷரம் எகிப்திய அக்ஷர முறையின்று தோன்றியதாமெனவும் அறிவாம்" (இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020: 114) என்று முடிவு கூறுவார்.

எகிப்திய நாகரிகம்

ஹக்ஸ்லி முதலான மேனாட்டறிஞர்கள் ஒப்பியல் அடிப்படையில் முன்வைத்த கருத்துக்களை அடியொற்றி> 'எகிப்தியரும் திராவிடரும் ஒரே குலமுறையை உடையவர்கள்| என்று கருத்துரைப்பார். "எகிப்தியரும் திராவிடரும் ஒரே குலமுறையில் வந்தவர்களாவிருத்தல் வேண்டும். முன்னாளில் கறுப்பென்றும் வெள்ளையென்றுஞ் சொல்லக்கூடாத மங்கன் நிறத்தினராகியவரும் மிகவுஞ் சீர்திருத்தமெய்தியவருமாகிய ஒரு சாதியார் ஐரோப்பாவில் இங்கிலாந்து> பிராஞ்சு> ஸ்பானியா என்னுமிவற்றிலும் மத்தியதரைக்கடலின் இரு பக்கத்திலும் எகிப்திலும் இந்தியா முழுமையிலும் சீன தேசத்திற் பசிபிப் சமுத்திரக்கரையிலும் அமேரிக்காவிற் பீரு மெக்சிகோ ஆகிய இரண்டு நாட்டினும் பரவியிருந்தார்கள். இவர்கள் சூரியனையுஞ் சர்ப்பங்களையும் சமயக்கொள்கைகளிற் சம்பந்தப்படுத்தியும் இன்றும் இந்தியாவில் வழங்குகிற சுவஸ்திக அடையாளத்தையு மங்ஙனே சமயக் கொள்கைகளிற் கொண்டும் வந்தவர்கள்" (இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020: 92>93) என்று அறிஞர்கள் முன்வைத்த ஒப்பியல் சிந்தனையை அவ்வாறே உள்வாங்கிக் கருத்துரைப்பார். இவ்விதமாக எகிப்திய> சுமேரிய> யவன நாகரிகங்களுக்கும் தமிழர் நாகரிகத்துக்கும் இடையோன தொடர்பைத் தமது ஒப்பீடுகள் மூலமாகவும் மேலைத்தேய அறிஞர்களின் ஆய்வு முடிவுகளின் அடிப்படையிலும் விபுலாநந்தர் முன்வைத்துள்ளார்.

மேலைத்தேய விஞ்ஞான மரபு - தமிழின் அறிவியல் மரபு

பன்னிரண்டு அதிகாரங்களைக் கொண்ட நூலாக அமைய வேண்டும் என்ற விருப்போடே விஞ்ஞானதீபம் என்ற தொடரைச் செந்தமிழ் இதழில் எழுதத் தொடங்கினார். அவ்வாக்கமும் மேற்றிசைச் செல்வத்தைப் போன்று முழுமைபெறவில்லை. வெளிவந்த சூரியசந்திரோப்பத்தி> மலை கடலுற்பத்தி> பூதோற்பத்தி ஆகிய பகுதிகளில் அவ்வவ் விடயப்பரப்புகள் சார்ந்து விஞ்ஞான விளக்கங்களைத் தருகிறார். மேலைத்தேய விஞ்ஞானக் கொள்கைகள் தமிழ்நூல்> வடநூல் முடிபுகளோடு ஒத்துள்ளவாற்றையும் விரிவாக எடுத்துரைக்கின்றமை குறிப்பிடத்தக்கது. தமிழ்ப் பண்டிதரின் இலக்கியப் புலமையையும் விஞ்ஞானப் பட்டதாரியின் அறிவியல் நோக்கையும் பல்மொழிப் புலமையாளரின் ஆளுமையையும் அத்தகைய விளக்கங்களில் தெளிவாய்க் காணமுடிகிறது. சங்கச் செய்யுள் (பரிபாடல் : 2)> மணிமேகலை> சிவஞானசித்தியார் முதலான நூல்களின் முடிபுகளை ஆராய்ந்து> அவற்றை மேலை விஞ்ஞானக் கொள்கைகளோடு பொருத்தி விளக்கியுரைக்கும் பாங்கு சிறப்பிடம் பெறுகிறது. ஐம்பெரும் பூதங்களின் உற்பத்தி வரன்முறையை இந்திய தத்துவ சாஸ்திர நூல்களின் துணையோடு அணுகிய விதம் இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டாகும்.

இலக்கிய ஒப்பாய்வு

சங்க வீரப் பாடல்கள் - கிரேக்கப் பாடல்கள்> இலியட் - தண்டியலங்கார காப்பிய இலக்கணம்> நாளும் வினையும் - பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்> திருக்குறள் கடவுள் வாழ்த்து - ஆளுடைய பிள்ளையாரின் திருச்சிவபுரத்துத் திருப்பதிகம் முதலாவை

ஒத்திருப்பதனை பல்வேறு கட்டுரைகளில் வெளிப்படுத்தியுள்ளார். அவற்றுள் கிரேக்க இலக்கியங்களைத் தமிழ் இலக்கியங்களுடன் ஒப்புநோக்கிய பாங்கு குறிப்பிடத்தக்கது. கிரேக்க (யவன) கவிஞராகிய ஹோமர் இயற்றிய இலியட் எனும் காப்பியமானது தண்டியாசிரியர் பெருங்காப்பியத்திற்கு எடுத்தோதிய வனப்புகள் அனைத்தும் அமையப்பெற்றது என ஒப்பீட்டடிப்படையில் குறிப்பிடுவார் (விபுலாநந்தம்> 2020: 115). அவ்வாறே மற்றுமொரு கிரேக்க கவியான ஹெசியொட் என்பவரின் ‘நாளும் வினையும்| படைப்பானது பதினெண் கீழ்க்கணக்கினையொத்த நடையினது என்றும் (இரகுபரன்> க. (ப.ஆ.)> 2020: 116) “தருமபுத்திரனாகிய யுதிஷ்டிரனும் வாயுபுத்திரனாகிய ஆஞ்சனேயரும் வீமசேனனும் இந்திரபுத்திரனாகிய அருச்சுனனும் அசுவினிதேவரது அம்சமாகிய நகுலசகாதேவரும் ஆண்டகைமை படைத்த வீரர்களன்றோ. யவனபுரத்தாரது புரோணேதிகாசங்களைப் படிக்குங்கால் இத்தகைய கருத்து அவர்க்கும் உளதென்பது புலனாகும்" (இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020: 445) என்றும் குறிப்பிடுவார்.

இவற்றுக்கப்பால் சங்க வீரப்பாடல்களும் யவனரின் பூர்வ இலக்கியங்களும் ஒத்திருக்கின்றன என்று விபுலாநந்தர் வெளிப்படுத்திய சிந்தனை குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடையது (1923 ஆம் ஆண்டு எழுதிய யவனபுரத்துக் கலைச்செல்வம் என்ற கட்டுரை வாயிலாக வெளிப்படுத்தினார்). “தமிழ்நூலிற் றலைசிறந்து விளங்கும் புறநானூறு என்னும் நூலானது வடிவேலேந்தி அடுகளத்துப் பொருத சுத்த வீரர்களாற் பாடப்பட்ட வஞ்சினக்காஞ்சி போன்ற செய்யுட்களைத் தன்னகத்தே கொண்டமையானன்றோ நாம் அதனைப் பொன்னேபோற் போற்றுகிறோம். யவனபுரத்துப் பூர்வ நூல்களும் இத்தகையினவே" (இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020: 120) என்று கூறி> சங்க வீரப்பாடல்களும் யவனரின் பூர்வ இலக்கியங்களும் ஒத்துள்ளன என்பார். “மேலைத்தேய அறிஞரான ஜி.யு.போப் (1885) பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றிக் கூறுகையில் அவை> அவற்றை ஒத்த கிரேக்கச் செய்யுள்களைப் போல உணர்வுகளில் ஒத்துள்ளன என்றும் அச்சமூகம் இருந்த நிலையில் குறிக்கத்தக்கவாறு ஒத்துள்ளன என்றும் கூறினார். இவரைத் தொடர்ந்து எஸ்.கிருஷ்ணசுவாமி ஐயங்கார் (1923) சில சங்கப்பாடல்கள் ஹோமரின் இலியது தோன்றுவதற்குக் களமான வீரநிலைக் கதைகளைப் போல உள்ளன என்று கூறினார்" (கைலாசபதி>க.> 2006 : 1). விபுலாநந்தருக்கு முன்னர் இவ்விதமாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில்> 1923ஆம் ஆண்டு செந்தமிழ் பத்திரிகையில் வெளிவந்த யவனபுரத்துக் கலைச்செல்வம் என்ற கட்டுரையில் முன்னர் குறித்தவாறான கருத்தை விபுலாநந்தர் வெளிப்படுத்தியிருந்தார். மேற்படி விடயம் சார்ந்து தமிழில் முதன்முதலில் வெளிப்படுத்தியவர் விபுலாநந்தரே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கிரேக்க மொழியிலும் ஆங்கில மொழியிலும் தேர்ச்சி மிக்கவராக விளங்கிய விபுலாநந்தர் கிரேக்க பூர்வ இலக்கியங்களைக் கண்ணுற்றே தம் நோக்கை வெளிப்படுத்தியுள்ளார். கிரேக்க இலக்கியங்கள்> அவற்றின் உள்ளடக்கம் என்பன குறித்து விரிவான தகவல்களை விபுலாநந்தர் தமது எழுத்துக்களில் வெளிப்படுத்தியிருந்தமை இதற்குச் சான்றாய் அமைகின்றது. தமது பல்வேறு கட்டுரைகளில் அக்கட்டுரைகளின் பொருண்மை

சார்ந்து அத்துறைசார் கருத்துக்களை வெளியிட்ட அறிஞர்கள் பற்றிக் கூறும் அவர்> போப் முதலானோரின் கருத்துக்களைத் துணைக்கொண்டு இவ்விடயம் பற்றிக் கூறாமையும் மேற்படி கருத்துக்கு வலுச்சேர்க்கிறது.

விபுலாநந்தரைத் தொடர்ந்து என்.கே.சித்தாந்தா (1927)> எஸ்.வையாபுரிப்பிள்ளை (1952)> ஜே.ஆர்.மார் (1958) ஆகியோர் கிரேக்க வீரயுகப் பாடல்களும் சங்கப்பாடல்களும் ஒத்திருப்பது குறித்துக் கருத்துரைத்தனர். இவற்றின் நீட்சியாக கைலாசபதி (1966) 'தமிழ் வீரநிலைக் கவிதைகள்| (Tamil Heroic Poetry) எனும் தலைப்பில் கிரேக்க வீரயுகப் பாடல்களையும் சங்க இலக்கியங்களையும் ஒப்பிட்டு ஆழமானதும் விரிவானதுமான ஆய்வை வெளிக்கொணர்ந்தார். கைலாசபதியின் ஆய்வினைத் தொடர்ந்தும் சங்க இலக்கியங்களையும் கிரேக்க வீரயுகப் பாடல்களையும் ஒப்புநோக்கும் மரபு தொடரப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் கதிர். மகாதேவனின் 'ஒப்பிலக்கிய நோக்கில் சங்க இலக்கியம்| எனும் நூல் கவனிப்புக்குரியதாகிறது. இவ்வரலாற்றுப் பின்புலத்தை மனங்கொண்டே> 'யவன புரத்துக் கலைச்செல்வம்| என்னும் கட்டுரையிலே அடிகளார் கிரேக்க மொழி இலக்கியங்களிலே காணப்படும் சில பண்புகளை வடமொழியுடனும் தமிழ்மொழியுடனும் ஒப்புநோக்குகிறார். எஸ்.வையாபுரிப்பிள்ளை> க.கைலாசபதி> கா.சிவத்தம்பி ஆகியோர் கிரேக்க இலக்கியங்களைத் தமிழ் இலக்கியங்களுடன் ஒப்பீட்டுப் பார்ப்பதற்கு முன்னரே சுவாமி விபுலாநந்தர் அத்தகைய ஒப்பியலாய்வினை மேற்கொண்டிருந்தமை அவருடைய ஆய்வுத் திறனின் இன்னொரு பரிமாணமாகும்" (சண்முகதாஸ்> அ.> 2017:135) என்று கருத்துரைப்பார்> சண்முகதாஸ்.

இலக்கியம் குறித்த விபுலாநந்தரின் ஒப்பியல் நோக்கு> பெரும்பாலும் கிரேக்க இலக்கியங்கள்மீதே மையங்கொண்டிருந்தது. அத்தகைய ஒப்பீடுகளுக்கு அப்பால் 'திருக்குறள் முதலதிகாரமும் திருச்சிவபுரத்துத் திருப்பதிகமும்| என்ற கட்டுரை வாயிலாக திருக்குறளின் கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தையும் ஆளுடைய பிள்ளையாரின் 'புவம் வளி கனல் புனல்| என்னும் முதற்குறிப்பினையுடைய திருச்சிவபுரத்துத் திருப்பதிகத்தையும் ஒப்பிட முனைகிறார். கடவுள் வாழ்த்தின் ஒப்பதாம் குறளுக்குப் பரிமேலழகர் தம்முரையில் குறிப்பிட்ட எண்குணங்களும் பின்கலந்தையில் குறிப்பிடப்படும் எண்குணங்களும் சைவாகமங்கள் காட்டும் எண்குணங்களும் ஒத்துள்ளன எனச் சான்றுகளை முன்வைத்து விளக்குகிறார். கடவுளை வழிபடுவோர் எய்தும் பயன்களாக கற்றதனா லாய பயனை எய்துவர்> நிலமிசை நீடு வாழ்வார்> யாண்டும் இடும்பையில> இருள்சேர் இருவினையுஞ் சேரா> நீடு வாழ்வார்> மனக்கவலை மாற்றல் எளிது> பிறஆழி நீந்தல் எளிது என வள்ளுவர் எடுத்துரைப்பனவற்றையும் ஆளுடைய பிள்ளையார் எடுத்துரைக்கும் பத்துப் பேறுகளையும் சிறப்புற ஒப்புநோக்குகிறார்.

மொழியியல் ஆய்வு

இசை> நாடகம்> இலக்கியம்> பழந்தமிழ் நாகரிகம் ஆகிய துறைகளுக்கு அப்பால் மொழியாராய்ச்சிகள் பலவற்றையும் விபுலாநந்தர் மேற்கொண்டுள்ளார். தமிழ் இலக்கணப்

புலமையும் அறிவியல் வழிப்பட்ட சிந்தனையும் கல்வியியல் நோக்கும் பேச்சுமொழி வழக்குகள் குறித்த புரிதலும் மொழியாராய்ச்சிகளுக்குப் பின்புலமாய் அமைந்தன. விபுலாநந்தரின் மொழியாராய்ச்சிகள் என்ற அடிப்படையில் கலைச்சொல்லாக்கம் குறித்த அவரது பணியும் அணுகுமுறையுமே அதிகம் கவனம்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு> மொழிகள் குறித்து – குறிப்பாக சொல் வழக்குகள் குறித்து - அவர் நிகழ்த்திய ஒப்பாய்வுகள் சில அடையாளப்படுத்தப்படுகின்றன.

‘சோழ மண்டலத் தமிழும் ஈழ மண்டலத் தமிழும்| என்ற கட்டுரை வாயிலாக செந்தமிழ் - கொடுந்தமிழ் வழக்குகளை ஒப்பிட்டு ஆராய்கிறார். அவரது கருத்தில் செந்தமிழ் என்பது எழுத்து வழக்கு. கொடுந்தமிழ் என்பது பேச்சு வழக்கு. இக்கருத்தாக்கம் வீரமாமுனிவரால் விதைப்பட்டது. தமிழ்நாட்டுப் பிராமணர் வழக்கு> மலையாள வழக்கு> யாழ்ப்பாண வழக்கு> மட்டக்களப்பு வழக்கு> இலங்கை முஸ்லிம்களின் வழக்கு ஆகியவற்றை அடிப்படையாக வைத்து ஒப்பியலாய்வை முன்னெடுத்துச் செல்கிறார். அக்கட்டுரையில்>

1. செந்தமிழ் டகரம் கொடுந்தமிழில் றகரம் ஆதல்
2. செந்தமிழ் நகரம் கொடுந்தமிழில் தகரம் ஆதல்
3. செந்தமிழ் தகரம் கொடுந்தமிழில் சகரம் ஆதல்
4. மொழிமுதல் வகரம் கொடுந்தமிழில் உகரம் ஆதல் (வீடு – ஊடு)
5. செந்தமிழில் மொழியீற்றில் வல்லொற்றூர்ந்து வரும் குற்றியலுகரம் கொடுந்தமிழில் மெல்லொற்று> இடையொற்று ஊர்ந்து வருதல் (பெண் - பெண்ணு> நெல் - நெல்லு)

என்றவாறு சுமார் இருபத்தைந்து விகற்பங்களை (செந்தமிழ் வழக்கு - கொடுந்தமிழ் வழக்குகளை) ஒப்பிட்டு விளக்குகிறார். மூன்று ஒப்பிடுகள் எடுத்துக்காட்டுக்களாக வழங்கப்படுகின்றன :

1. ஒன்று முதல் ஒன்பது வரையுமுள்ள எண்கள் யாழ்ப்பாணத்தில் ஒன்று> இரண்டு (சிறுபான்மை ரண்டு)> மூண்டு> நாலு> ஐந்து> ஆறு> ஏழு> எட்டு> ஒன்பது என நிற்பன. மட்டக்களப்பில் ஒண்டு> ரெண்டு> மூணு> நாலு> அஞ்சு> ஆறு> ஏழு> எட்டு> ஒன்பது என நிற்பன.

2. யாழ்ப்பாணத்தில் அகர வீற்றின் பின்னும் யகரம் உடம்படு மெய்யாகும். காணவில்லை – காணயில்லை; மட்டக்களப்பில் ‘காணல்ல|; யாழ்ப்பாணத்தில் யகரத்தின் முன்னிற்கும் அகரம் ஐகாரமாதல் உண்டு – காணயில்லை.

3. மட்டக்களப்பில் மொழிமுதல் ஒகார ஓகாரங்கள்> எகர ஏகாரங்கள் ஆவதுண்டு. சொல்லுங்க – செல்லுங்க; போய்விட்டார் - பேய்த்தார் (பெரும்பான்மை முஸ்லிம்களிடையே காணப்படுவது). மட்டக்களப்புத் தம்பிலுவில் என்னும்

> கிராமத்திலே மொழிமுதல் ஐகாரம் எகரமாதல் உண்டு. மைத்துனன்; மைத்துனி – மெச்சான்; மெச்சி (இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020: 671> 672).

இக்கட்டுரையில் மட்டக்களப்பில் வழங்கும் 'கா| என்னும் அசைநிலை இடைச்சொல் பற்றிய ஆய்வைப் பின்வருமாறு நிகழ்த்தியுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது :

> நன்னூலார் கூறிய 'கா| என்னும் அசைநிலை இடைச்சொல் மட்டக்களப்பிலே வழக்கில் உளது. இதனை அவதானித்த ஒரு புலவன் "ஆடவர் தோளிலுங்கா> அரிவையர் நாவலிலுங்கா" என்று கூறினான் என்பதாகக் கேள்வி. ஆடவர் பாற்குடங்களை உறியில் வைத்து காத்தடியின் இருதலையிலுங் கட்டித் தோளில் எடுத்துச் செல்வர். மகளிர் உரையாடும்போது 'என்னகா சொல்றா?|> 'ஏங்கா நீ வரல்லை?|> 'எலக்கா இங்கே சத்து வந்திற்றுப்போ| என்று இப்படிக் 'கா| அசைத்துப் பேசுவது அந்நாட்டு வழக்கம். 'எலக்கா| என்பதிலே கலித்தொகையில் வரும் 'எல்லா| திரிந்து நிற்பதை நோக்குக (இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020: 672).

மட்டக்களப்பில் வழங்கும் 'கா| என்னும் அசைநிலை பற்றி நன்னூல் தரும் விளக்கத்தை மட்டக்களப்புப் பேச்சுவழக்கோடு ஒப்பிட்டு விபுலாநந்தர் முன்வைத்த கருத்து> பின்நாளில் பண்டிதர் வி.சீ.கந்தையா அது குறித்து விரிவாக ஆராய கால்கோள் இட்டமையும் குறிப்பிடத்தக்கது (கந்தையா> வி.சீ.> 1964: 88-92).

"வடமொழியாளர் வரிவடிவத்தைத் தமிழ்மொழியாரிடமிருந்து பயின்றுகொண்டாரென்பது றைஸ்டேவிஸ் முதலிய ஆங்கிலப் பண்டிதர்களுடைய சித்தாந்தமாகும். தேவநாகரலிபி பூர்வத்தில் எழுதப்பட்ட உருவத்தில் மேலிழுக்கப்பட்ட கோடின்றி யிருந்ததெனவும் அவ்வுருவத்தில் அதற்கும் தென்னாட்டில் வழங்குகின்ற கிரந்தலிபிக்கும் ஒற்றுமை யிருந்ததெனவும் அறிஞர் கூறுவர். கிரந்தலிபி பழந்தமிழெழுத்தைப் பின்பற்றியெழுந்தது. பழைய சாசனங்களில் வழங்குகிற வட்டெழுத்துத் தொல்காப்பியர் காலத் தெழுத்தினின்றுந் திரிவுபட்டதாமாயினும் உள்ளவற்றுட் பழமையானதாதலின் அதனையே பழந்தமிழெழுத்தெனக் கொள்ளலாம்" என்று தமிழ் மொழியின் வரிவடிவத்தில் இருந்தே வடமொழி வரிவடிவம் தோன்றிற்று என்பார். தம்முடைய கருத்துக்கு மேனாட்டார் ஆய்வுகளையும் சான்றுப்படுத்துவார். மேனாட்டாரின் ஆய்வின் முடிவுகளும் விபுலாநந்தரின் மேற்படி கருத்துக்களும் மேலாராய்சிக்கு உரியன. இருப்பினும்> மொழியின் தொல்வரிவடிவம் குறித்த ஒப்பியல் சிந்தனைப் போக்கும் விபுலாநந்தரிடம் காணப்பட்டமைக்கு இதுவுமோர் சான்றாகிறது.

எபிரேய நாகரிகம் பற்றிக் கூறவிழைந்த விபுலாநந்தர்> எபிரேயத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையே தொடர்புகள் காணப்பட்டமைக்குத் தமிழ்> வடமொழிச் சொற்கள் எபிரேய

மொழியில் கலந்திருப்பதனை ஒரு சான்றாக காட்டுகிறார். அவ்விதம் அவர்காட்டும் மொழி ஒப்புமைச் சான்றுகள் வருமாறு :

1. தமிழ் அகில் - எபிரேய மொழி அஹல்
2. தமிழ் தோகை (மயில்) – எபிரேய மொழி – துகிம்
3. வடமொழி கவி குரங்கு – எபிரேய மொழி கொவ்
4. வடமொழி இபம – எபிரேய மொழி ஹபின் (இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020:114)

ஒப்பியலாய்வுகளுக்குப் பின்புலமாய் அமைந்தவை

இதுவரை குறித்தவாறாக பல்வேறு விடயங்கள் சார்ந்து ஒப்பியல் கண்ணோட்டத்தை விபுலாநந்தர் முன்வைப்பதற்குப் பின்புலமாய் அமைந்த காரணிகள் குறித்து ஆராய்வதும் அவசியம். பன்மொழி அறிவு> தமிழ்மொழி – தமிழ் இலக்கியம் - தமிழ்ப் பண்பாடுமீது கொண்டிருந்த அதீத பற்றுணர்ச்சி> தமிழர் நாகரிகத்தை மேலோங்கச் செய்யவும் அதனை மேனாட்டார்க்கு உணர்த்தவும் விரும்பிய உயரிய நோக்கு என்பனவற்றை அவ்வகையில் விதந்து கூறலாம்.

லத்தீன்> கிரேக்கம்> வங்காளம்> பாளி> சிங்களம்> அரபு> ஆங்கிலம்> வடமொழி ஆகிய மொழிகளில் விபுலாநந்தர் தேர்ச்சியுடையவராக விளங்கினார். இப்பன்மொழி அறிவு அவருக்கு நூல்களை அவற்றின் மூலத்திலேயே படித்தறியும் வாய்ப்பினைக் கொடுத்திருக்கக்கூடும். தமிழ்மொழி – தமிழ் இலக்கியம் - தமிழ்ப் பண்பாடுமீது அதீத பற்றுணர்ச்சி கொண்டிருந்தமையை அவரது நுல்கள்> கட்டுரைகள் வாயிலாகவும் அவர் ஆற்றிய உரைகள்> விவேகானந்தன் சஞ்சிகையில் எழுதிய ஆசிரியர் தலையங்கங்கள் வாயிலாகவும் அறிய முடியும். அந்தப் பற்றுறுதி ஒருபோதும் தமிழ்மீதான வெறியாக வெளிப்பட்டதில்லை என்பதற்கு அவரது கட்டுரைகள் சாட்சி. எப்போதும் நடுவுநிலைமையில் நின்று விஞ்ஞானரீதியில் அணுகும் நோக்கு அவரிடம் காணப்பட்டது.

“ஒல்காப் பெருந்தவத் தொல்காப்பியனாருரைத்த பொருணூலும் திருவள்ளுவப்பயனும் பொது நூலாய்ப் பொருள் நான்கினையும் உணர்த்துபவாய் இம்மை மறுமைப் பயனை ஒருங்கு தந்துநிற்பன என்பது புலப்படும். பெருமானடிகள் “என்னை பாவம் அரசற்குக் கவற்றி பெரிதாயிற்று. அதுவும் ஞானத்திடையதாகலான்> யாம் அதனைத் தீர்க்கப்பாலம்" என அருள் சுரந்து அளித்த ‘அன்பினைந்திணை|யும் ரடிக ளருளிச்செய்த ஐந்திணைக்கோவையும் சிறப்புநூலாய் அருமறை மொழியாய் வீட்டியலை விளக்கி நிலவுவன. இந்த நான்கு நூலும் ‘தமிழர் நான்மறை|யென ஆன்றோராற் போற்றப்படுவன. பொன்னும் மணியும் பொருளெனக் கருதா நுண்மதித் தமிழ் மாந்தராற் பொருளெனக் காக்கப்படுவன விவையே. தமிழ் முதுகுடிப் பிறந்த திருவுடைப் பெருமக்க ளைவரும் இவற்றைப் போற்றிப் படித்து இம்மை மறுமைப் பயனைப் பெறுவார்களாக“ (இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020: 195) என்று குறிப்பிடுவது அந்தப்

பற்றுறுதிக்குச் சான்றாகும். இதுபோன்ற கூற்றுக்கள் பலவற்றை விபுலாநந்தரது எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் தரிசிக்கலாம். பொருத்தப்பாடு கருதி மேலுமொரு எடுத்துக்காட்டு வருமாறு:

தமிழ்மொழியாளராகிய சித்தவைத்தியம் வல்லோர் பிறமொழி வைத்தியராலே தீர்த்தற்கரிய கருங்குட்டம்> வெண்குட்டம்> கயரோகம்> நீரிழிவு என்றின்னவற்றை எளிதிற் குணப்படுத்தி வருகின்றனர். இத்தகைய வைத்திய நூல்களைச் செவ்விதிற் பதிப்பித்து உலகிற்குதவல் அத்துறையில் வல்ல அறிஞர் மேற்பொறுத்த கடனாகும். இனி> நாள்மீன்> கோள்மீன் என்றின்னவற்றினது சஞ்சரிப்பு> சூரிய சந்திரரது இயக்கம் என்றிவற்றையெல்லாம் கவனித்தறிந்து நிச்சயித்தற்குரிய உயர்ந்த கணித நூல்கள் தமிழில் இருக்கின்றவென்பதற்குப் புறநானூறு> பரிபாடல்> சிலப்பதிகாரம்> சிந்தாமணி எனும் தமிழ் நூல்களுள்ளே காணப்படும் கணித நூல் முடிபுகள் சான்றுபகர்கின்றன. இவற்றை ஆராய்ந்து தொகுதி நூலுருவில் வெளிக்கொணர்தல் தமிழன்னைக்குச் செய்யும் பெருந்தொண்டாகும்.

இப்பற்றுறுதியைப் போன்றே தமிழர் நாகரிகத்தை மேலோங்கச் செய்ய வேண்டும் என்ற அவாவும் அடிகளாரின் நெஞ்சை நிறைத்திருந்தது. 'மேற்றிசைச் செல்வம்| என்ற கட்டுரையை எழுதத் தொடங்குகையில்> "பரந்த இப்பொருளை ஆராயுங்கால் மேலைநாட்டாரது அரசியன்முறையும் புலனெறி வழக்கமும் கலைபயி னிலைமையும் பொருள்செயல் வகையும் பிறவும் தெற்றெனப் புலப்படுவனவாம். அங்ஙனம் புலப்படவே மனத்தின்கண் ஊக்கம் மேலிட்டு அவர் படைத்த திருவை யாமும் படைப்பதற்கு முயல்வோமாதலின் இவ்வாராய்ச்சி பெரிதும் பயனுடைத்தாமென்க" (இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020: 84) என்பார். பல்வேறு இடங்களில் சுமேரிய> யவன நாகரிங்களிலும் பார்க்க தமிழர் நாகரிகம் பழமையானது என்று உரைப்பதைக் காணலாம். "தமிழரது நாகரிகம் மிகப் பழமை வாய்ந்தது. உலக சரித்திரத்திலே தமிழரே முதல் முதல் நாகரிக வாழ்க்கை எய்திய சாதியாரென்பதற்கும் கடல் கடந்து சென்று தமது நாகரிகத்தைப் பலப் பல நாடுகளிலும் பரப்பினர் என்பதற்கும் வணிகத்துறையிலும் கணித நூல்> வான நூல் முதலிய எத்துறைகளிலும் வல்லுநராயிருந்தார்களென்பதற்கும் பல சான்றுகள் கிடைத்திருக்கின்றன" (இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020: 84) என்று கூறுவதும் தமிழர் நாகரிக மேம்பாடு நோக்கியேயாகும்.

விபுலாநந்தர் தமிழ் இலக்கிய இலக்கணம்> வடமொழி இலக்கியங்கள்> ஆங்கில இலக்கியம்> பௌதிகவியல் ஆகியவற்றைக் கற்றதோடு தமது கல்விக்கு வரம்பிடாது உலக வரலாறு> மானிடவியல்> தத்துவம் முதலாய விடயப்பரப்புக்களையும் தேடியறிந்து கற்றமையாலேயே அவரது உளப்பாங்கும் சிந்தனை நோக்கும் விரிவடைந்தது. அவை மேற்குறித்தவாறான ஆய்வுகளுக்குத் துணையாய் அமைந்தவாறும் மறுப்பதற்கில்லை.

முடிவுரை

பல்வேறு தளங்களில் தமது ஒப்பியல் நோக்கினை விபுலாநந்த அடிகள் வெளிப்படுத்தியிருந்தமையை இதுவரை எடுத்துவிளக்கிய விடயங்கள் தெளிவுறுத்தும். அத்தகைய ஆய்வுகள் வெளிவந்த காலப்பின்னணியை அணுகுவதன் மூலம் அவரது ஆய்வுகளின் முக்கியத்துவத்தை மதிப்பிட முடியும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறிலிருந்து மேலைத்தேய ஆய்வு அணுகுமுறைகளைப் பின்பற்றிய தமிழாராய்ச்சிகள் வெளிவரத் தொடங்கின. மேலையத்தேய அறிஞர்களும் சைமன்காசிச்செட்டி> பி.சுந்தரம்பிள்ளை> வி.கனகசபைப்பிள்ளை> வி.கோ.சூரியநாராயண சாஸ்திரி முதலான சுதேசிய அறிஞர்களும் அத்தகைய ஆராய்ச்சிகளை முன்னெடுத்தனர். அதன் தொடர்ச்சியாக இருபதாம் நூற்றாண்டின் முற்கூறில் ரா.இராகவையங்கார்> அரசன் சண்முகனார்> மு.இராகவையங்கார்> அ.குமாரசுவாமிப்பிள்ளை> ஆ.தம்பிமுத்துப்பிள்ளை முதலானோரும் தமது ஆராய்ச்சிகளை முன்னெடுத்தனர். இவர்களது ஆராய்ச்சிகள் பழந்தமிழ் இலக்கிய மாண்பினையும் தமிழர் பெருமையினையும் எடுத்துரைப்பனவாகவே பெரும்பாலும் விளங்கின. இவ்விதமான ஆய்வுகள் வெளிவந்த சூழலிலேயே விபுலாநந்தரது ஆய்வுகளும் வெளிவரத்தொடங்கின. விபுலாநந்தரும் மேற்சொன்ன ஆய்வுத் தளங்களில் பயணிக்கும் அதேவேளை தமிழின் நவீனத்துவம் சார்ந்த சிந்தனையோட்டங்களையும் உட்கொண்டு தமது ஆய்வுகளை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை முற்கூறிய ஆய்வாளர்களில் இருந்து வேறுபட்டு இக்கட்டுரையாக்கத்தில் விபரிக்கப்பட்டவாறு பல்வேறு கோணங்களிலும் தமது ஒப்பியல் சிந்தனையை வெளிப்படுத்தியமையும் அவரது ஆய்வுகளுக்குத் தனிதன்மையை வழங்கின்றது. விபுலாநந்தரது ஒப்பியல் சிந்தனை விரிவுக்கு மேலைத்தேய அறிஞர்களின் ஒப்பியல் ஆய்வுகள் உறுதுணையாக அமைந்தவாற்றினையும் மறுப்பதற்கில்லை. இருப்பினும்> தமிழில் ஒப்பியல் ஆய்வுகள் வளர்ச்சியுறாத சூழலில்> அத்தகைய ஆய்வுகளை வெளிக்கொணர்ந்தவர் என்ற வகையிலும் தமிழாராய்ச்சி உலகில் அவருக்கு ஓர் உயரிய இடமுண்டு. ஒப்பியல் ஆய்வில் முன்னின்று செயற்பட்ட கைலாசபதி> இவற்றை மனங்கொண்டே> "வளர்ந்து வரும் தமிழியல் ஆராய்வுகளில் ஒப்பியற் கல்விக்கு முக்கிய இடமுண்டு. அடிகளார் இத்துறை முன்னோடிகளில் ஒருவர் எனலாம். அடிகளார் காலத்துத் தமிழ் அறிஞரிற் பெரும்பாலானோர் ஆங்கில இலக்கியம்> வரலாறு என்பனவற்றை வெவ்வேறு அளவில் அறிந்திருந்தனரெனினும் அவற்றைத் தமது இலக்கிய நோக்குடன் இணைத்துக்கொண்டனர் என்பதற்கில்லை" (கைலாசபதி>க. 1969:77) என்று விபுலாநந்தரது ஒப்பியல் ஆய்வுப் பணியை மதிப்பிடுவார்.

உசாத்துணை நூற்பட்டியல்

- இரகுபரன்> க.> (ப.ஆ.)> 2020> விபுலாநந்தம்> கொழும்பு> இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
- கதிர் மகாதேவன்> 1985> மூன்றாம் பதிப்பு> ஒப்பிலக்கிய நோக்கில் சங்க இலக்கியம்> மதுரை> மக்மில்லன் இந்தியா லிமிடட்.
- கந்தையா> வி.சீ.> 1964> மட்டக்களப்புத் தமிழகம்> யாழ்ப்பாணம்> ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம்.

- கமலாநாதன்> சா.> இ.> (தொ.ஆ)> 1992> சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு நினைவு மலர்> மட்டக்களப்பு> சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை.
- ளகைலாசபதி>க. 1969> "முத்தமிழ் முனிவரின் ஒப்பியல் நோக்கு"> அடிகளார் படிவ மலர்> காரைதீவு> சிலை நிறுவனக் குழுவினர்.
- கைலாசபதி>க.> 2006> தமிழ் வீரநிலைக் கவிதை> பாலசுப்பிரமணியன் கு.வெ. (மொ.பெ.)> சென்னை – கொழும்பு> குமரன் புத்தக இல்லம்.
- சதாசிவம்> ஆ.> 2006> தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி> தஞ்சாவூர்> தஞ்சாவூர் பல்கலைக்கழகம்.
- சண்முகதாஸ்>அ.> 2017> "சுவாமி விபுலாநந்தரின் ஆய்வுத் திறனும் நவீன நோக்கும்"> பன்முகப் பார்வையில் சுவாமி விபுலாநந்தர்> யோகராசா> செ. (தொ.ஆ.)> மட்டக்களப்பு> சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை.
- மௌனகுரு> சி.> 1991> விபுலாநந்த அடிகளாரின் சமூக> கலை> இலக்கிய நோக்கு> மட்டக்களப்பு> சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை.
- விசாகரூபன்> கி.> (தொ.ஆ)> 1992> விபுலாநந்த அடிகளார் - நூற்றாண்டு விழாச் சிறப்பு வெளியீடு> யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்> தமிழ் மன்றம்.